**தலைப்பு 257 - களுத்துறை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு - 257 களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 மே 26 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 916.40 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 912.20 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 4.20 மில்லியன் அதாவது 0.46 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 796.20 | 795.59 | 0.61 | 0.07 |
| மூலதனம் | 120.20 | 116.61 | 3.59 | 2.99 |
| மொத்தம் | 916.40 | 912.20 | 4.20 | **0.46** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 29 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 15 திணைக்களங்களினால் ரூபா 3,446 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 3,306 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 140 மில்லியன் அதாவது 4 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 25701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 60.76 | 55.88 | 46.76 | 56.68 | 265.00 | 196.41 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ரூபா 108.29 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 07 வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 368.62 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0059/000 | 0.17 |
| 6000/0000/00/0002/0077/000 | 0.40 |
| 6000/0000/00/0016/0030/000 | 218.32 |
| 6000/0000/00/0017/0008/000 | 40.05 |
| 6000/0000/00/0018/0037/000 | 94.78 |
| 6000/0000/00/0019/0006/000 | 14.79 |
| 6003/0000/00/0033/0000/000 | 0.09 |
| மொத்தம் | 368.60 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினாலும் அதன் கீழுள்ள சில பிரதேச செயலகங்களினாலும் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பிரதேச செயலகங்களினால் கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |
| பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 | மாவட்ட செயலகத்தினாலும் களுத்துறை பிரதேச செயலகத்தினாலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

25701 ஆம் விடய இலக்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 196,410,844 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகளில் ரூபா 342,164 தொகை 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2016 யூன் 22 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

ஏனைய அமைச்சுக்களிலிருந்து வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலகத்திற்குரிய கட்டிடங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான சகல வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு அவை நிலையான சொத்துப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுச் செயலாளரின் 1993 ஒக்தோபர் 07 ஆந் திகதிய ஈ/2/பிணை கடிதம் | பொருட்கள் மற்றும் காசுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் காசோலைகளில் கையொப்பமிடுகின்ற 14 பிரதேச செயலகங்களுக்குரிய உத்தியோகத்தர்களிடமிருந்தும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) ஓய்வூதியச் சுற்றறிக்கை | |
| 2009 சனவரி 07 ஆந் திகதிய 1/2009 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | வயது செல்லும் அடிப்படையில் ஏற்படுகின்ற நோய்களுக்காக கொடுப்பனவு செய்ய முடியாதிருந்த போதிலும், மில்லனிய மற்றும் பேருவளை பிரதேச செயலகங்களினால் அவ்வாறான நோய் காணப்படுகின்ற 4 ஓய்வூதியதாரர்களுக்காக ஊனமுன்றோர் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. |

**3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படுதல், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல் மற்றும் செயற்திட்ட தாமதம் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன.

(i) 2014 ஆம் ஆண்டின் போது மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட ரூபா 223,350,271 கூட்டுத்தொகையான 43 செயற்திட்டங்களின் பணிகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 மார்ச் மாத இறுதிவரையிலும் பூர்த்தி

செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக ரூபா 125,882,490 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) மதுகம புனித மரியாள் கல்லூரியில் நீச்சல் தடாகம் மற்றும் விளையாட்டரங்கு என்பவற்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தை கட்டங்கட்டமாக அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த கிரய மதிப்பீடொன்றும் கட்டிடத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் 2009 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிர்மாணங்களுக்காக ரூபா 17,291,614 தொகை செலவிடப்பட்டிருந்தது. பயிற்சி தேவையின் அடிப்படையில் இந்த நீச்சல் தடாகத்தை பயன்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 மார்ச் மாதம் வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றமொன்றைப் பெற்றிராத செயற்திட்டங்கள்

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) யட்டியன மேற்கு கரப்பந்து மைதானத்தை செப்பனிட்டு பூர்த்தி செய்தல்

---

2014 இல் ரண் அருண மேற்கு பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அகலவத்த பிரதேச செயலாளரினால் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அகலவத்த பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 465,157 இனால் நிறைவேற்றப்பட வேண்டிய நிர்மாணங்கள் திருப்திகரமானதாக நிறைவேற்றப்பட்டமையால் ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீத பிடிகாசும் செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2015 நவம்பர் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கரப்பந்து விளையாட்டிற்காக எதற்கும் பொருத்தமற்ற சேற்று குழியைச் சுற்றி ஜீ.ஐ.குழாய் பதித்து விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) ஹொரணகொட பாலம் நிர்மாணம்

---

2014 இன் வீட்டிற்கு வீடு கிராமத்திற்கு கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹொரணகொட பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதுகம பிரதேச செயலாளரினால் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 4,376,639 தொகை செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் தொடர்பாக ஆரம்ப புலனாய்வு அறிக்கையின் படி இதன் ஆரம்ப நோக்கம் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் போக்குவரத்துப் கஷ்டங்களை மாற்றியமைப்பதாக இருந்த போதிலும், பாலத்தில் முடிவில் பாரியளவான பயிரிடப்படாத வயலொன்று அவதானிக்கப்பட்டதுடன் பாலத்தால் அக்கரைக்கு செல்வதற்கான வீதியும் நிர்மாணிக்கப்பட்டவில்லை.

(iii) கோனலியத்த ஊடாக கட்டுகஹவத்த அமுண வரை மீள் நிர்மாணம் செய்தல்

---

2014 ஆம் ஆண்டில் மாகாண நெகும நிகழ்சித்திட்டத்தின் கீழ் மதுகம பிரதேச செயலாளரினால் ரூபா 980,000 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் அந்த ஒப்பந்தம் விவசாயச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் மாதம் வரையில் ரூபா 338,624 தொகை செலவிடப்பட்டு செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்தின் சொத்துக்கள் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டமை

களுத்துறை பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஏத்தகம தாய்சேய் சிகிச்சை நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 4,179,056 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2016 மார்ச் மாதம் வரையிலும் சிகிச்சை நிலையம் திறக்கப்பட்டிருக்கவில்லை. சிகிச்சைக்காக ரூபா 552,544 தொகையான உபரணங்கள் 2014 திசெம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றைப் பாவனைக்கு எடுக்காது தேசிய சுகாதார நிறுவனத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. சுகாதார வைத்திய உத்தியோகத்தரால் சிகிச்சை நிலையத்திற்குத் தேவையான உபகரணங்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் போது மேற்கூறப்பட்ட பிரகாரம் பணத்தைச் செலவிட்டு டீவீடீ இயந்திரம், தொலைக்காட்சி, அடுப்புக்கள், மேசைகள் மற்றும் அலுமாரிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தால் மோதரவில விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ரூபா 31,768,585 தொகையில் பூர்த்தி செய்வதற்கு 2014 நவம்பர் 10 ஆந் திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பு முற்பணமாக 2014 திசெம்பர் 02 ஆந் திகதி ரூபா 6,353,717 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதும், 2016 மார்ச் மாதம் வரையில் ஒருவருடமும் மூன்று மாதங்களுமான காலம் கடந்திருந்த போதிலும் முற்பணத் தொகையின் அளவிலும் வேலை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.9 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டமும் இழப்பும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தின் வாகனங்களுக்கு ஏற்பட்ட 05 விபத்துக்களிலிருந்து ரூபா 813,233 தொகையான நட்டஇழப்பு ஏற்பட்டிருந்த போதிலும், அவை ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1989 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மாவட்ட செயலகத்தில் ஏற்பட்ட ரூபா 3,214,040 கூட்டுத்தொகையான 9 நட்ட இழப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அந்த நட்ட இழப்பிற்குரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ தவறியிருந்தது.

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மில்லனிய பிரதேச செயலகத்தினால் ஊனமுற்றோர் நிலை தொடர்பாக வைத்திய பரிசோதனை சபையின் அங்கீகாரமின்றி 1996 ஆம் ஆண்டு முதல் மாதாந்தம் ரூபா 18,656 வீதம் ஓய்வூதிய உத்தியோகத்தருக்கு ஊனமுற்றோர் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊனமுற்றோர் நிலையை உறுதிப்படுத்தாமல் ஓய்வூதியம்பெற்ற உத்தியோகத்தரொருவருக்கு 1991 மே மாதம் முதல் மாதமொன்றிற்கு ரூபா 16,502 வீதம் ஊனமுற்றோர் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த ஓய்வூதியகாரருக்காக பாதுகாவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பேருவளை பிரதேச செயலகத்தினால் 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையில் 26 வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்கு பராயமடையாதோர் கொடுப்பனவின் கீழ் 2015 ஒக்தோபர் மாதம் வரை கூட்டுமொத்தமாக ரூபா 186,138 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) களுத்துறை பிரதேச செயலகத்தினால் பேணப்படுகின்ற ஓய்வூதியம் பெறுவோர் நீக்கப்படுகின்ற பதிவேட்டுடன் மரணமடைந்த ஓய்வூதியம் பெறுவோர் பதிவேட்டை பரிசோதனை செய்த போது ஓய்வூதியம்பெற்ற உத்தியோகத்தர்கள் மரணமடைந்தாக கிராம உத்தியோகத்தரினால் அறிவிப்பதில் ஏற்பட்ட தாமதம், மற்றும் நீக்கும் பதிவேட்டில் குறிப்பிடுவதிலுள்ள தாமதத்தினால் ரூபா 205,797 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பிரதேச செயலகத்தினால் பேணப்படுகின்ற ஓய்வூதியம் பெறுவர்களை நீக்கும் பதிவேடு மற்றும் மரணமடைதல் தொடர்பாக கிராம சேவை உத்தியோகத்தர் அறிவிக்கும் பதிவேடு என்பவற்றின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது மரணங்களைப் பதிவுசெய்தல் முறையாக மேற்கொள்ளப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பண்டாரகம பிரதேச செயலகத்திற்குரிய மரணித்த 83 ஓய்வூதியம் பெறுபவர்களில் 62 பேர் மாத்திரமும், பாணந்துறை பிரதேச செயலகத்திற்குரிய 278 ஓய்வூதியம் பெறுபவர்களில் 131 பேரின் மரணங்கள் மாத்திரமும் கிராம சேவை உத்தியோகத்தரினால் அறிவிக்கப்பட்டிருந்தன.

(ஊ) சுனாமியால் அகதிகளானவர்களை மீண்டும் குடியமர்த்துவதற்காக வீடுகளை அமைப்பதற்காக பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்கத்தின் காணியைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 41,873,341 தொகை அரசாங்கத்தால் செலவிடப்பட்டிருந்தது. வீடுகள் நிர்மாணிக்கும் போது நிலவுகின்ற சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாது அந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக அந்த வீடுகளின் உரித்துறுதிகளை வீட்டுரிமையாளர்களுக்கு வழங்குதல் 2016 மார்ச் மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.11 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 68 | 64 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 35 | 18 | 17 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,964 | 1,713 | 251 |
| (iv) | ஆரம்ப நிலை | 170 | 162 | 08 |
| | மொத்தம் | 2,237 | 1,957 | 280 |